# கொடைக்கானல் நகராட்சி

2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ஆம் நாள் (13.09.2021) திங்கள்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) 2021–22ம் ஆண்டு சட்மன்ற கூட்டத் தொடரில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் மான்ய கோரிக்கையின்போது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

9) மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பொதுமக்களின் நலனுக்காகவும், குறிப்பாக சிறுவர்களுக்காகவும் 3096 விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளன. நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

நகராட்சிகளில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துவது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கையுடன் மதிப்பீடு தயார் செய்து அனுப்பிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20028/2021/தி2 நாள். 8.9.2021 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொடைக்கானல் நகராட்சியில் உள்ள கீழ்க்கண்ட விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்களை மேம்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. ஜிம்கானா விளையாட்டு திடலினை மேம்படுத்துதல் | ரூ. 120.00 இலட்சம் |
| 2. நகராட்சி அலுவலகம் அருகில் உள்ள சிறுவர் பூங்காவினை மேம்படுத்துதல் | ரூ. 70.00 இலட்சம் |
| 3.கே.ஆர்.ஆர். கலையரங்க சிறுவர் பூங்காவினை மேம்படுத்துதல் | ரூ. 110.00 இலட்சம் |
| 4. மூஞ்சிக்கல் விளையாட்டு மைதானத்தினை மேம்படுத்துதல் | ரூ. 105.00 இலட்சம் |
| 5. அண்ணா பூங்காவினை மேம்படுத்துதல் | ரூ. 195.00 இலட்சம் |
| மொத்தம் | ரூ. 600.00 இலட்சம் |

இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடு அரசு மானியமாக வழஙகிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1090, நாள். 13.09.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, கொள்கை விளக்க குறிப்பு 2021–2022 மானிய கோரிக்கை எண். 34 நாள். 24.08.2021 ல் ஏற்கனவே உள்ள பழைய மார்க்கெட்டுகள் மேம்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கொடைக்கானல் நகரம், அண்ணாசாலை, வார்டு டி, பிளாக் 4, நகரளவு எண். 36 ல் ஏற்கனவே அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பழைய தினசரி மார்க்கெட்டினை நவீன வசதிகளுடன் கூடிய தினசரி அஙகாடிகளாக மேம்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு ரூ. 419.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீட்டினை அரசு மானியமாக வழஙகிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1091, நாள். 13.09.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) 15–வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதி 2020–2021 ன் கீழ் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது.

Tied Grand 2020-2021 Rs. 139.83 Lakh

Untied Grand 2020-2021 Rs. 140.00 Lakh

அதன்படி கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| Tied Component | | | |
| 1 | 24 | நகராட்சிக்கு சொந்தமான பழைய குப்பை கிடஙகு பகுதியில் தினசரி 2 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையிலான உயிரி எரிவாயு உலை ( 2 MTD Bio Gas Plant ) அமைத்தல் | 35.00 |
| 2 | 24 | நகராட்சிக்கு சொந்தமான பழைய குப்பை கிடஙகு பகுதியில் அமையவுள்ள எரிவாயு உலைக்கு தேவையான இயந்திரஙகள் விநியோகம் செய்தல் மற்றும் பொருத்துதல் | 43.00 |
| 3 | 5,14,24 | குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல்<br>1. காந்திபுரம் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் ரூ. 6.20 இலட்சம்<br>2. சத்தியாநகர் மற்றும் வசந்தா நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் ரூ. 5.70 இலட்சம்<br>3. எம்.ஜி.ஆர். நகர் மற்றும் கலைஞர் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் ரூ. 3.50 இலட்சம்<br>4. கே.பி.எம்.பாறை பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் ரூ. 4.90 இலட்சம் | 20.30 |
| 4 | 19 | தலைமை நீர்த்தேக்கத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பழுதுகளை சரி செய்து புதுப்பிக்கும் பணி | 48.00 |
| | | **மொத்தம்** | **146.30** |
| Un-Tied Component | | | |
| 1 | 15 | பிளிஸ்வில்லா பகுதியில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 15.50 |
| 2 | 6 | பில்டிஙக சொசைட்டி நுழைவு வாயில் பகுதியில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 22.00 |
| 6 | 19 | செல்லபுரம் 9வது குறுக்கு தெரு பகுதியில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 7.00 |
| 4 | 6 | நேதாஜி நகர் பகுதியில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 13.00 |
| 5 | 2 | பச்சைமரத்து ஓடை முதல் குறுக்கு தெருவில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 23.00 |
| 6 | 1 | பாக்கியபுரம் 3வது தெருவில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 25.00 |
| 7 | 14 | சோமசுந்தரம் காலணி 4வது தெருவில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 22.00 |
| 8 | 1 | காமராசர் சாலை ( இருதய ஆண்டவர் கோயில் சாலை முதல் செண்ட் ஜான்ஸ் பள்ளி வரை ) தார்ச் சாலை அமைத்தல் | 12.50 |
| | | **மொத்தம்** | **140.00** |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை 15 வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதி 2020–2021 ன் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. விளம்பர கட்டணம் மதிப்பீட்டுத் தொகைக்குள் செலுத்த அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1092, நாள். 13.09.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான, குத்தகை இனங்களுக்கு ஆண்டுக் குத்தகை 2020–2021 முதல் 2022–2023 மூன்றாண்டுக்குரியது மற்றும் மாத வாடகை 2020–2021ஆம் ஆண்டிற்கு அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.03.07.2007–ன்படி குத்தகை மற்றும் மாத வாடகை அடிப்படையில் ஒப்படைக்க 7.09.2021 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில், நவீன புதிய பேருந்து நிலையக் கடை எண்.14 மற்றும் 27க்கு மட்டும் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | புதிய பேருந்து நிலைய கடை எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் / விலாசம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ. (மாத வாடகை) |
|---|---|---|---|---|
| 1. | 14 | திரு.க.அசாருதீன், இந்திரா நகர், கொடைக்கானல். | வைப்புத் தொகை ரூ.50,000/–<br>காப்புத் தொகை ரூ.25,000/– | ரூ.3300/– |
| 2. | | திரு.A.காதர் மைதீன், 4/115E26A,இந்திராநகர் கொடைக்கானல். | வைப்புத் தொகை ரூ.50,000/–<br>காப்புத் தொகை ரூ.25,000/– | ரூ.3500/– |
| 3. | 27 | திரு.V.குறிஞ்சி வேல், சீனிவாசபுரம், கொடைக்கானல். | வைப்புத் தொகை ரூ.50,000/–<br>காப்புத் தொகை ரூ.25,000/– | ரூ.3000/– |
| 4. | | திரு.சேகர் செபாஸ்டின், பெர்ன்ஹில் ரோடு, கொடைக்கானல். | வைப்புத் தொகை ரூ.50,000/–<br>காப்புத் தொகை ரூ.25,000/– | ரூ.3500/– |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.A.காதர் மைதீன், என்பவர் கடை எண்.14க்கு உயர்ந்தபட்சமாக மாத வாடகை ரூ.3500/–க்கு கோரியுள்ளார். திரு.சேகர் செபாஸ்டின், என்பவர் கடை எண்.27க்கு உயர்ந்தபட்சமாக மாத வாடகை ரூ.3500/–க்கு கோரியுள்ளார். எனவே, மேற்கண்ட உயர்ந்தபட்சமாக மாத வாடகை ரூ.3500/–க்கு கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. மேற்கண்டவாறு கடை எண்.14க்கு மாத வாடகை ரூ.3500/–க்கு உயர்ந்தபட்சமாக கோரியுள்ள திரு.A.காதர் மைதீன், என்பவருடைய ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அரசு ஆணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.03.07.2007.ன் படி குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு கடை எண்.27க்கு மாத வாடகை ரூ.3500/–க்கு உயர்ந்தபட்சமாக கோரியுள்ள திரு.சேகர் செபாஸ்டின், என்பவருடைய ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அரசு ஆணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.03.07.2007.ன் படி குத்தகை உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1180/2008/அ3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1093, நாள். 13.09.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) கொடைக்கானல் நகராட்சிக்குற்பட்ட 24 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு கீழ்குண்டாறு குடிநீர் திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. கீழ்குண்டாறு குடிநீர் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இணைப்புகளுக்கு Flow Control Valve பொருத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே உள்ள பழைய இணைப்புகளுக்கு Flow Control Valve கீழ்குண்டாறு குடிநீர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணியின் மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படவில்லை. எனவே, நகராட்சி பகுதியில் உள்ள பழைய குடிநீர் இணைப்புகளுக்கு Flow Control Valve நகராட்சி மூலம் பொருத்திட வேண்டியுள்ளதால் கீழ்க்கண்ட குடிநீர் உதிரி பொருட்கள் தேவையாக உள்ளது.

1. ½" Flow Control Valve - 2200 Nos
2. ½" G.I. Coupling - 2200 Nos
3. ½" G.I. Union - 2200 Nos
4. ¾ " Flow Control Valve - 100 Nos
5. ¾ " G.I. Coupling - 100 Nos
6. ¾ " G.I. Union - 100 Nos

நகர்பகுதியில் சீரான குடிநீர் வழஙகும் பொருட்டு மேற்கண்ட பொருட்களை ஒப்பந்தப்புள்ளி கோரி வாஙகிக் கொள்ளவும் அதற்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 9.91 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 1094, நாள். 13.09.2021. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

*******

6) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறையின் 2020–2021 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அனைத்து தெருமின் விளக்குகளும் மின் சேமிப்பு விளக்குகளாக (LED) மாற்றம் செய்யப்படும் என மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 35871/2014/இ1 நாள். 8.9.2021 ம் தேதிய கடிதத்தில், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் மொத்தம் 3743 தெருவிளக்குகள் உள்ளன. இதில் ஏற்கனவே 1825 மின் விளக்குகள் LED மின் விளக்குகளாக மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள 1918 மின் விளக்குகள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| TL | CFL | | T5 | | | SVL | MHL | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| 40w | 1X36W | 2X36W | 1X24W | 2X24W | 4X24W | 250W | 400W | |
| 775 | 186 | 62 | 182 | 183 | 262 | 46 | 222 | 1918 |

மேற்கண்ட 1918 தெருமின் விளக்குகளை LED மின் விளக்குகளாக மாற்றுதல் மற்றும் புதிய மின் விளக்குகள் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.630.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் அரசு மானியமாக வழஙகிட கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 1095, நாள். 13.09.2021. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அனுமதிக்கப்படுகிறது. |

7) 15–வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதி 2021–2022 ன் கீழ் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது.

Tied Grand 2020-2021 Rs. 139.83 Lakh
Untied Grand 2020-2021 Rs. 140.00 Lakh

அதன்படி கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| Tied Component | | | |
| 1 | 13 | தூய்மை பணியாளர்கள் குடியிருப்பு, நகரமைப்பு அலுவலர் குடியிருப்பு மற்றும் எரிவாயு தகனமேடையில் மழை நீர்சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் | 10.00 |
| 2 | 8,22 | பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் தங்கும் விடுதி, ஆணையர் குடியிருப்பில் மழை நீர்சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் | 10.00 |
| 3 | 24 | குப்பை கிடஙகில் RRC shed கம்பி வேலி அமைத்தல் | 9.10 |
| 4 | 24 | குப்பை கிடஙகில் மழை நீர் வாய்க்கால் அமைத்தல் | 9.20 |
| 5 | 24 | குப்பை கிடஙகில் RRC shed மேற்கூரை அமைத்தல் | 10.00 |
| 6 | 24 | குப்பை கிடஙகில் பாதுகாப்பு சுவர் அமைத்தல் | 17.70 |
| 7 | 1–12 | வார்டு எண். 1 முதல் 12 வரை குடிநீர் விநியோக மோட்டார்கள் சப்ளை செய்தல் | 10.00 |
| 8 | 13–24 | வார்டு எண். 13 முதல் 24 வரை குடிநீர் விநியோக மோட்டார்கள் சப்ளை செய்தல் | 10.00 |
| | | **மொத்தம்** | **86.00** |
| Un-Tied Component | | | |
| 1 | 15 | தலைமை நீர்த்தேக்கத்தில் பாலம் அமைத்தல் | 48.00 |
| 2 | 1–24 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு டம்பர் பிளேசர் குப்பைத் தொட்டிகள் சப்ளை செய்தல் | 10.00 |
| | | **மொத்தம்** | **58.00** |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை 15 வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதி 2021–2022 ன் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. விளம்பர கட்டணம் மதிப்பீட்டுத் தொகைக்குள் செலுத்த அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1096, நாள். 13.09.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குவாலிஸ் ஈப்பு TN 57 W 1492 வாகனத்தில் இஞ்சின் மற்றும் கியர் பாக்ஸ் பழுது ஏற்பட்டு வாகனம் இயக்க இயலாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை துவக்கி உள்ள நிலையில் அலுவலர்கள் மழை காலஙகளில் வரி வசூல் பணி மேற்கொள்வதிலும், மீட்பு பணியின் பொருட்டு வெளியில் சென்று பணி மேற்கொள்வது சிரமமாக உள்ளது. மேலும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பணிகள் தற்போது நடைபெற்று வருவதினால் தேர்தல் காலஙகளில் வாகனத்தின் தேவை இன்றியமையாததாக உள்ளதால் இவ்வாகனத்தின் பழுதினை உள்ளூர் பணிமனைகளில் மேற்கொள்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. சசி ஆட்டோ ஒர்க்ஸ்,
   கான்வெண்ட் சாலை, ரூ. 97,655/–
   கொடைக்கானல்.

2. கரண்ட் ஆட்டோமொபைல் ஒர்க்ஸ்,
   கஙகா காம்பவுண்ட், கொடைக்கானல் ரூ. 1,08,575/–

வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ். சசி ஆட்டோ ஒர்க்ஸ், கான்வெண்ட் சாலை, கொடைக்கானல் பணிமனையின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்..

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1097, நாள். 13.09.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/—த.நாராயணன்,

தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.